**ஸ்மித்** : தப்பிவிட்டார்களா? தப்பவிட்டுவிட்டாய் என்று சொல், உமார். புலி பதுங்குகிறது என்றால், பணிகிறது என்று அர்த்தமல்ல, தெரிந்ததா? அந்தத் துரோகிகளை எங்கிருந்தாலும் பிடித்து இழுத்து வரச்செய். உடனே நமது படைகளை அனுப்பு!

**உமார்** : ஆகட்டும், ஸ்மித், டேய் சிப்பாய்களா! உடனே செல்லுங்கள். தமது படைவீரரை அழைத்துக் கொண்டு, இந்தக்காடு முழுவதையும் சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்துவிடுங்கள். பயல்கள் அதிக தூரம் போயிருக்க முடியாது. ம். சீக்கிரம்!

(சிப்பாய்கள் ஓடுகிறார்கள்).

- திரை -

## காட்சி - 10

**இடம்** : தெருக்காட்சி

**பாத்திரங்கள்** : முரசு அறைபவன் - 2, சிப்பாய் - 3, கிராம வாசிகள் 1, 2, பொதுமக்கள்.

(காட்சி ஆரம்பத்தில் முரசு அறைபவன் தண்டோராவை அடித்துக்கொண்டுவந்து நிற்கிறான். தண்டோரா ஒலி கேட்டதும் ஊர் மக்களும் கிராமவாசி 1ம் 2ம் வந்து கூடுகின்றனர். சிப்பாய்-3 தன்னிடமுள்ள அறிக்கைப் பத்திரத்தை உரத்த குரலில் வாசிக்கிறான்).

சிப். 3 : இதனால் சகலமான ஜனங்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், (முரசொலி) காளையார் கோயில் சண்டையில் முத்து வடுகநாதத் தேவர் இறந்துபோய்விட்டதாலும், (முரசொலி) ராணிவேலு நாச்சியார் நாட்டைவிட்டு ஓடிப்போய்விட்டதாலும் (முரசொலி) இந்தச் சிவகங்கைச் சீமையின் ஆட்சிப் பொறுப்பை நவாப் முகம்மதலி ஏற்றுக்கொண்டிருக்கிறார். (முரசொலி) மேலும், சிவகங்கை மன்னர் நவாபுக்குச் செலுத்தவேண்டிய கிஸ்தித் தொகையைப் பல வருஷங்களாகச் செலுத்தத் தவறியாதல் (முரசொலி) நவாப் முதம்மதலி சாஹெப் அவர்கள் உத்தரவுப்படி நாங்கள் இந்தச் சீமையின் கிஸ்தி வசூலைக் குத்தகைக்கு எடுத்திருக்கிறோம். (முரசொலி) எனவே சகலமான ஜனங்களும் தாங்கள் செலுத்த வேண்டிய சகலவிதமான வரிப் பாக்கிகளையும் பைசா பாக்கியில்லாமல் எங்களுக்குச் செலுத்தியாக வேண்டியது (முரசொலி). அவ்வாறு செய்யாமல் யாரேனும் ஹத்து மீறி நடந்தார்களேயானால், அவர்களுடைய ஆடுமாடுகள். சொத்துச் சுகங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்படும். (முரசொலி) ராஜ ஆக்கினைக்கும் அவர்கள் ஆளாவார்கள். (நீண்ட முரசொலி)

(பிரகடனம் முடிந்ததும், முரசறைபவன் முரசை அறைந்தவாறே செல்கிறான். அவனைப் பின்தொடர்ந்து சிப்பாய் - 3ம், பொதுமக்களும் செல்கின்றனர். கிராமவாசி 1-ம், 2-ம் மேடையில் மிஞ்சுகிறார்கள்).

கிராமவாசி 1 : பாத்தியாண்ணே? உலகம் போற போக்கைப் பாத்தியாண்ணே? நாட்டிலே விளைச்சலும் இல்லே; வெள்ளாமையும் இல்லே. இந்த நேரத்திலே வரிவசூல் வேறயாம்!

கிராமவாசி 2 : ஆமாண்டாப்பா, ஆமாம். நம்ம நாட்டுக்கு என்ன கேடு காலமோ தெரியலே. கொள்ளைக்காரன் மாத்தி வெள்ளைக்காரன், வெள்ளைக்காரன் மாத்திக் கொள்ளைக்காரன்னு ஒவ்வொரு பயலா வந்து, நம்மைக் கொள்ளையடிக்கிறதே வழக்கமாப் போச்சி.

வருசம் முச்சூடும் சண்டை சண்டைன்னு, சனங்க செத்துப் புழைச்சா வெள்ளாமையைத் தான் கவனிக்க முடியுமா? ஹூம்! நம்ம புழைப்பே வெறும் செத்த புழைப்பாய்ப் போச்சி!

கிராம. 1 : அட, ஏண்ணே சலிச்சிக்கிறே? இப்படிச் சலிச்சிச் சலிச்சித் தாண்ணே ஒவ்வொரு பயலும் நம்ம மேலே குதிரை ஏறிட்டுப் போறான்.

சர்க்காருன்னா, சனங்களோட கஷ்ட நஷ்டத்தைத் தெரிஞ்சி வரியைப் போடணும். அப்படிப் போடாத சர்க்காருக்கு நாம ஏண்ணே வரி கொடுக்கணும்?

கிராம. 2 : போடா, விஷயம் தெரியாத பயலே! நீ எப்படியும் கட்டை மண்ணாப் போ, எனக்குக் கொட்டியழ வேண்டியதை மட்டும் குறையாமல் கொட்டியழு! - அப்படிங்கிறது தானடா ராசாங்கம்! இது தெரியாமப் பேசறியே!

Scanned by CamScanner

கிராம. 1 : அதெல்லாம் முடியாதண்ணே. நாம குடுத்துத் தானே இவனுக வாங்கணும். அதையும் தான் பார்ப்போம்.

கிராம. 2 : போடா முட்டாள். வரியை ஒழுங்கா கட்டலேன்னா, கழுத்திலே பிரியைக் கட்டி இழுத்து வசூல் பண்ணிப்போடுவாங்கடா. தெரிஞ்சிக்கோ.

கிராம. 1 : அட, சரிதாண்ணே! இந்தப் படுபாவிப் பயலுகளுக்கு நாம வரியே கொடுக்கக் கூடாதண்ணே! சண்டைக் காலத்திலே இவனுக நம்மகிட்டேயிருந்து தட்டிப் பறிச்சிக்கிட்டுப் போன ஆடு, மாடு, கோழிகளுக்குக் கணக்கே இல்லை, இந்தக் கொள்ளைக்காரப் பாவிகளுக்கா வரி கொடுக்கணும்?

கிராம. 2 : போடா போ. மலையோடு மோதினால் மண்டை தாண்டா சிதறும்? எல்லாம் தெய்வம் விட்ட வழி! காளேஸ்வரா! (கையெழுத்துக் கும்பிடுகிறான்).

கிராம. 1 : (எரிச்சலுடன்) காளேஸ்வரா, காளேஸ்வரா! காளேஸ்வரன்தான் நம்மைக் கைவிட்டுட்டாரே அண்ணே! நம்ம மவராசாவையும் கொன்னுப்பிட்டு ராணியம்மாவையும் ஊரை விட்டு விரட்டிவிட்ட இந்தக் கொடும்பாவிகளுக்கு நாம வரி கொடுக்கிறதாவது? கூடாதண்ணே கூடாது, கூடவே கூடாது.


கிராம. 2 : ஏலே ஐயா! நீ இளவட்டப் புள்ளே. உன் உடம்பிலே ரத்தம் துள்ளிப் புடைச்சிக்கிட்டுப் பாயுது. அந்தத்



கிராம. 1

கிராம. 2

கிராம. 1



இடம்

பாத்திரங்கள்

திமிரிலே நீ என்ன வேணாலும் பேசுவே! ஆனா, நடக்கிற காரியமா நீ சொல்றது?

**கிராம. 1** : ஏண்ணே நடக்காது? அண்ணே! நீ சங்கதி தெரியாமப் பேசுதே. நம்ம மருது சேர்வைக்காரர் சும்மா இருக்க மாட்டாரண்ணே. இன்னைக்கு இல்லாட்டாலும் என்னைக்காச்சும் ஒருநாள், அவரு வந்து இந்தப் பயலுகளையெல்லாம் விரட்டியடிக்கராரா, இல்லையான்னு பாரண்ணே!

**கிராம. 2** : தம்பி, 'பகல்லெபக்கம் பாத்துப் பேசு, ராத்திரி அதுவும் பேசாதே'ன்னு பழமொழி. ஒண்ணு கிடக்க ஒண்ணைச் சொல்லி வைக்காதே. சரி, வா போகலாம். இங்னே நின்னு பேசிக்கிட்டிருக்கிறது ரெண்டு பேருக்குமே இடைஞ்சலு.

**கிராம. 1** : சரிண்ணே. வா போகலாம்.

(இருவரும் போகிறார்கள்).

- திரை -

## காட்சி - 11

**இடம்** : (திண்டுக்கல்) கோட்டை உட்புறம்.

**பாத்திரங்கள்** : வேலுநாச்சியார், வெள்ளை மருது.

(காட்சி ஆரம்பத்தில் வேலு நாச்சியார் தலைமீது கை வைத்து, கண்ணீர் சிந்திக் கவலையோடு அமர்ந்திருக்கிறாள். அப்போது வெள்ளைமருது அங்கு வருகிறான். வெள்ளைமருதுவைக்

கண்டதும் வேலுநாச்சியார் தனது கண்ணீரை அவசர அவசரமாகத் துடைத்து மறைக்கிறாள். அதைக்கண்டதும்...)

**வெள்ளை** : மகாராணி! இதென்ன கண்ணீர்? வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் மட்டும் வழி பிறந்துவிடுமா?

**வேலு** : பிரதானியாரே! என் கதி இப்படியாகுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அரண்மனையிலே அரசியாக வாழ்ந்த நான் இவ்வாறு இங்குவந்து ஒருவருடைய ஆதரவில் வாழ்ந்து வருவதை நினைத்தால்! நினைக்க – நினைக்க நெஞ்சம் குமுறுகிறது, பிரதானியாரே!

**வெள்ளை** : மகாராணி உங்களுக்கு இங்கு என்ன குறை? ஹைதரலி நம்மை அடிமைகளாக நடத்தவில்லையே. ராஜ அந்தஸ்தோடுதானே நடத்துகிறார், இவருடைய உதவியும் ஆதரவும் நமக்குக் கிடைக்காமல் போயிருந்தால், நம் கதி என்னவாயிருக்கும்? சிறிது யோசித்துப் பாருங்கள்.

**வேலு** : ஹைதரலியின் அன்பையும் ஆதரவையும் நான் குறை சொல்லவில்லை. ஆனால், நாம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தத் திண்டுக்கல் கோட்டையிலே இருந்து கொண்டிருப்பது? நமது நாட்டையும் நகரத்தையும் பிரிந்து நாம் இங்கேயே இருந்து கொண்டிருப்பது நமக்கே அழகாகுமா?

**வெள்ளை** : கவலைப்படாதீர்கள், மகாராணி, நாம் இன்னும் அதிக நாட்கள் இங்கு இருக்க

வேண்டியிராது. நான் ஹைதரலியிடம் எல்லா நிலைமைகளையும் பற்றித் தீர்க்கமாகப் பேசி ஆலோசித்தேன். இப்போது, தென்னாட்டுப் பாளையக்காரர்கள், முக்கியமாகப் பாஞ்சாலங்குறிச்சி மன்னர் வீரபாண்டியக் கட்டபொம்மன், கும்பினியாருக்கு விரோதமாக நடந்து வருகிறாராம் அவரது எதிர்ப்பைச் சமாளிப்பதே வெள்ளையர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறதாம். எனவே வெள்ளையர்களின் கவனம் முழுவதும் இப்போது தெற்கேதான் திரும்பியிருக்கிறதாம். பாஞ்சாலங் குறிச்சியாரைப் பணியவைக்கும் முயற்சியில்தான், கும்பினியாரும் நவாப்புச் சேனையும் ஈடுபட்டிருக்கிறார்களாம். இதனால் ஹைதரலியின் படையெடுப்பைச் சமாளிக்கக்கூட, அவர்கள் விரும்ப வில்லையாம்.

**வேலு** : அப்படியானால், இப்போது நிலைமை நமக்குச் சாதகமாக இருக்கிறதென்று சொல்கிறீர்?

**வெள்ளை** : ஆம் மகாராணி. கும்பினியார் இப்போது பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றத்தான் திட்டமிடுகிறார்களாம். எனவே சிவகங்கைச் சீமையின் பாதுகாப்பைக் கூட, அவர்கள் பலப்படுத்தவில்லையாம். மகாராணி! முள்ளை முள்ளைக் கொண்டுதானே எடுக்க வேண்டும். எடுக்கும்போது வேதனை இருக்கத்தான் செய்யும். அதைப் பொறுத்துக் கொண்டால் -

**வேலு** : பொறுத்துக்கொண்டுதானே இருக்கிறேன், பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா, பிரதானியாரே!

**வெள்ளை** : எல்லையை எட்டிவிட்டோம் மகாராணி, நாட்டின் நிலைமையை அறிந்து வருமாறு, தம்பி சின்ன மருதுவை நேற்றே நான் சிவகங்கைக்கு அனுப்பிவிட்டேன். தம்பி வந்து சேதி சொன்னவுடன் நாம் சிவகங்கைச் சீமையைக் கைப்பற்ற வேண்டியதுதான். ஹைதரலியும் நமக்கு ஆயுதங்களும் படைவீரர்களும் தந்து உதவுவதாக வாக்களித்திருக்கிறார்.

**வேலு** : உமது வார்த்தை ஒன்றுதான் எனக்கு ஆறுதல்.

**வெள்ளை** : மகாராணி, எனக்கோ, சிவகங்கைச் சீமையைக் கைப்பற்றித் தாங்களை மீண்டும் ராணியாக்கினால் தான் ஆறுதல். அந்த ஆறுதலைப் பெறும் வரையிலும் நான் ஓய்ந்திருக்கமாட்டேன்.

**வேலு** : தங்கள் தம்பி இன்றே வந்துவிடுவாரா?

**வெள்ளை** : எப்போது வருவான் என்று எப்படிச் சொல்ல முடியும்? நாட்டின் சகல நிலைமைகளையும் தெரிந்துகொள்வதோடு நாட்டு மக்களையும் நமக்கு ஆதரவாக ஒன்றுதிரட்டிப் போருக்கு உருவாக்க வேண்டாமா? எப்படியும் சீக்கிரமே வந்துவிடுவான், மகாராணி! உங்களுக்கு அவன் நல்ல செய்தியையே கொண்டு வருவான்.

**வேலு** : பிரதானியாரே, நான் எல்லாவற்றுக்கும் உம்மைத் தான் நம்பியிருக்கிறேன்.

ரகுநாதன்

**வெள்ளை** :

**வேலு** :

**வெள்ளை** :



இடம்

பாத்திரங்கள்

கிராம. 1

கிராம. 2

**வெள்ளை** : அந்த நம்பிக்கைக்கு எந்நாளும் மோசம் வராது மகாராணி. சரி, நான் வருகிறேன். ஹைதரலியைச் சந்திக்க வருவதாகத் தகவல் அனுப்பினேன், சரி, நான் வரட்டுமா? கவலையை விடுங்கள்.

**வேலு** : நீர் அருகில் இருக்கும்போது, எனக்கு இனி என்ன கவலை? போய்வாரும்.

**வெள்ளை** : வருகிறேன் மகாராணி.

(வெள்ளை மருது செல்கிறான்).

- திரை -

## காட்சி - 12

**இடம்** : தெருவோரத்துக் குடிசை

**பாத்திரங்கள்** : கிராமவாசிகள் 1, 2. சிப்பாய்கள் 1,2,3, சின்ன மருது.

(குடிசையின் முன்னுள்ள கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கிராமவாசி 2 சுருட்டுப் பிடித்துக்கொண்டிருக்கிறான். கட்டில் காலில் ஒரு வெள்ளாடும் குட்டியும் கட்டுண்டு கிடக்கின்றன. சில சட்டி பெட்டிகளும் சுவரோரமாகக் காணப்படுகின்றன. கிராமவாசி 1 வந்து சேர்கிறான்).

**கிராம. 1** : என்னண்ணே! சும்மா உட்கார்ந்து சுருட்டுப் புடிக்க ஆரம்பிச்சிட்டே? காட்டுக்குப் போகலியா?

**கிராம. 2** : காட்டுக்கா? இனிமே சுடுகாட்டுக்குத்தான் போவணும். இந்தப் படுபாவிப்பய

Scanned by CamScanner

மவன், நவாப்போடே குத்தகக்காரன், எந்த நேரத்திலே நம்ம நாட்டுக்குள்ளே காலடி எடுத்து வச்சானோ, அன்னிக்குத் தேதியிலே இருந்துதான் சொட்டு மழை கூடப் பேய மாட்டேன்னுட்டுதே. இந்தக் கொடும் பாவிங்க ராசாங்கத்திலே மழை வேறயா பெய்யும்! மழை பேஞ்சால்லெ காட்டிலே பயிர் பச்சையைப் பார்க்கலாம். ஹூம், இந்த எழவிலே வரிவசூல் கெடுபிடி வேறே, மனுசன் எப்படிப் புழைக்கிறதுன்னே தெரியலே.

**கிராம. 1** : பின்னே - அன்னைக்கி நான் சொன்னதுக்கு நீ என்னமோ சொன்னியே. இந்தப் படுபாவிங்க ராசாங்கம் வந்தாலும் வந்தது. எதுக்குத்தான் வரிபோடறதுன்னு ஒரு கணக்கில்லாமப் போச்சே. இனிமே பெண்டாட்டிக்கு ஒரு வரி, புள்ளைக்கு ஒரு வரி, செத்தா ஒரு வரி, உசுரோடேயிருந்தா வேறே வரி - இப்படி வரின்னு போட்டு நம்ம வாணாளை வாங்கி, கடைசியிலே நம்மை வெங்காயத்தைத் தோலுரிச்ச கதையிலே உரிச்சித் தள்ளிப்பிடுவானுக!

**கிராம. 2** : அந்தக் கண்றாவியை ஏன் கேட்கிறே? பத்து நாளைக்கி முன்னேதான் குத்தகைக்காரச் சிப்பாய்க்கு நான் படியளந்தேன். அதுக்குள்ளேயும் பழைய படியும் நெருக்குதானுக.

**கிராம. 1** : எம் புழைப்பும் அப்படித்தாண்ணே. ஆனா, அந்தப் பயல்களுக்கு நான் இதுவரையிலே ஒத்தைக் காசை எண்ணிக் கீழே வைக்கலே. ஆனா, எத்தினி நாளைக்கித்தான் இப்படிப் புழைக்க முடியும்? நம்ம ராணியும் மருது

சேர்வைகாரரும் என்ன ஆனாங்கள்'னே தெரியலே. அவங்க என்னென்னைக்கி வந்து நம்ம சீமையை மீட்டப் போறாங்களோ? நமக்கு என்னென்னிக்கி விடிவு காலம் புறக்கப்போவுதோ? எல்லாம் ஒரே குழப்பமா இருக்கு.

கிராம. 2 : நமக்கு எங்கே தம்பி பொழுது விடியப் போவுது? நமக்கெல்லாம் இந்தக் கட்டை பூமியிலே சாயிற அன்னைக்கித்தான் விடிவு காலம். அதுவரையிலே வாரவன் போறவனுக்கெல்லாம் நாம் வாய்க்கரிசி போட்டுட்டு, நாம் மட்டும் ஈரமண்ணைத் தின்னுட்டுக் கிடக்கிறதுதான் நம்ம தலைவிதி.

கிராம. 1 : (திடுக்கிட்டு எழுந்தவனாக) அண்ணண்ணே! அதோ பாரு. அந்தக் கொலைகாரப் பாவிங்க வாராங்கண்ணே, ஓடு ஓடு!

(ஓட முயல்கிறான். அதற்குள் சிப்பாய்களும் குத்தகைக்காரச் சிப்பாயும் ஓடிவந்து கிராமவாசி - 1ஐப் பிடித்துக் கொள்கிறார்கள். கிராமவாசி - 2 பயந்து நடுநடுங்கி நிற்கிறான்).

சிப். 3 : டேய், பயல்களா? ஓடவா பார்க்கிறீங்க? கிஸ்திப் பணத்தைக் கட்டாமல் டபாய்க்கவா பார்க்கிறே? எத்தனை நாளைக்குத்தான் இப்படி டபாய்க்கலாம்னு பார்த்தே? டேய், சிப்பாய்களா? இவனுக ரெண்டுபேரையும் புடிச்சிக் கட்டுங்கடா!

(சிப்பாய்கள் 1ம் 2ம் கிராமவாசிகளைப் பின்புறமாகக் கைகளைக் கட்டி நிறுத்துகிறார்கள்).

கிராம. 2 : (பரிதாபமாக) எசமான்!

சிப். 3 : என்னடா எசமான்? கிஸ்திப் பணத்தைக் கேட்டு வந்தா இன்னிக்கி நாளைக்கின்னு ஏய்க்கவா பார்க்கிறே?

கிராம. 2 : எசமான்! நவாப்புச் சாய்பு! இந்த ஒரே ஒரு தவா மட்டும் எனக்கு மாப்புக் குடுங்க. இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே...

சிப். 3 : ஒரு நாழிகூட இனிமேப் பொறுக்க முடியாது. இப்போதே பணத்தை எண்ணிக் கீழே வைக்கணும். இல்லே, பிறகு உன் ஆடு, மாடு, வீடு வாசல், கோழி எல்லாம் பறிமுதல் ஆயிடும். பாத்துக்க!

கிராம. 2 : இந்தாங்க சாய்பு. இப்படித் திடுதிப்புன்னு வந்துகேட்டா, நாங்க பணத்துக்கு எங்கே போவோம்? கொஞ்சம் தயவு பண்ணுங்க, உங்க காலைப் புடிச்சிக் கேட்டுக்கிறேன். உங்க புள்ளை குட்டிக எல்லாம் நல்லாயிருக்கணும்.

சிப். 3 : என் புள்ளைகுட்டிகள்லாம் நல்லாத்தான் இருக்கு! சரிசரி. உங்கிட்டே பேசிக்கிட்டு நிக்க எனக்கு நேரமில்லே. டேய் சிப்பாய்! இந்த ஆடு கோழியை யெல்லாம் இழுத்துக் கொண்டு வாடா. வீட்டுக்குள்ளே போய் சட்டி பொட்டியை யெல்லாம் தூக்குடா!

(ஒரு சிப்பாய் வீட்டினுள் செல்கிறான். இன்னொருவன் ஆட்டை அவிழ்க்கிறான். வீட்டுக்குள் சென்றவன் ஒரு சோற்றுச் சட்டியைத் தூக்கிவந்து வெளியில் போட்டு உடைக்கிறான். இதைக் கண்டு பதறுகிறான் கிராமவாசி - 2).

கிராம. 2 : (பதறிப்போய்) இதென்ன அநியாயம்! அய்யா, சாய்பு! என் முதுகிலே அடியுங்க; பட்டுக்கிடறேன். வயித்திலே அடியாதிங்க! இப்படிச் சோத்துச்

Scanned by CamScanner

சட்டியை தூக்கி உடைக்கிறீங்களே! இது நியாயமா? தெய்வத்துக்குப் பொறுக்குமா?

சிப். 3 : என்ன சொன்னே? தெய்வத்துக்குப் பொறுக்குதா, பொறுக்காதான்னு பார்ப்போம்.

(கிராமவாசி -2இன் கன்னத்தில் ஓங்கி அறைகிறான். கிராமவாசி - 2 அடி பொறுக்கமாட்டாமல் அலறுகிறான். இதைக் கண்டு சினந்து குமுறிய கிராமவாசி எதிர்த்துச் சாடி முறைக்கிறான்).

கிராம. 1 : இதென்னய்யா அநியாயம்? பெரிய மனுசனைப் போட்டு இப்படி அடிக்கிறியே! நீ அவரு புள்ளை வயசுக்குப் பொறுவியா? நவாப் தர்பாருன்னா என்ன? உங்க பாவட்டா அவ்வளவுக்கா கொடிகட்டிப் பறக்குது? நியாய அநியாயம் ஒண்ணுமே கிடையாதா?

சிப். 3 : (கிராமவாசி - 1 இடம் திரும்பி) யாரடா இவன்? சீ! நாயே! என்ன வாய்த்துடுக்கடா உனக்கு? நவாப்பைப் பத்திப் பேச உனக்கு என்ன நாக்குத் துணிச்சல்? உனக்கு அவ்வளவு திமிரா? அத்தனை வாய்க்கொழுப்பா? உன் திமிருக்கு என்ன கிடைக்கிறது பார்!

(சிப்பாய் 3- கிராமவாசி - 1ஐத் தனது கையிலிருந்த சவுக்கினால் அடிக்கத் தொடங்குகிறான்.)

கிராம. 1 : (அலறியவாறே) ஐயோ, கடவுளே! என்னைக் கொல்றானே! ஐயோ! அப்பா! - அம்மா! - தெய்வமே! கேட்க நாதியில்லையா? - யாத்தா!...

(அடி விழுந்துகொண்டிருக்கும்போதே அங்குத் திடீரென்று சின்ன மருது உருவிய வாளுடன்

வந்து குதித்து, சிப்பாய் 3-ஐக் கீழே தள்ளி, அவன் கையிலிருந்த சவுக்கைப் பிடுங்குகிறான். சின்ன மருது தன் முகத்தையும் உடம்பையும் அடையாளம் தெரியாமல் கறுப்புத் துணியால் போர்த்தி மூடியிருக்கிறான்).

**சின்ன** : நிறுத்துடா பயலே! தட்டிக்கேட்க ஆளில்லை என்ற தைரியமாடா உனக்கு?

**சிப். 3** : (கீழேயிருந்து எழுந்து நின்றவாறே) யாரடா நீ? என் வேலையிலே குறுக்கிட உனக்கு என்ன தைரியம்? யாரடா நீ?

**சின்ன** : யாரோ? நான்தான் உன் எமன். உங்கள் கூட்டத்துக்கே எமன்! (சிப்பாய்களிடம் திரும்பி) டேய், சிப்பாய்களா? மரியாதையாக இவர்களைக் கட்டவிழ்த்து விடுங்கள். அந்த ஆட்டையும் அவிழ்த்த இடத்தில் திரும்பவும் கட்டுங்கள்! (அவர்கள் தயங்குவதைக் கண்டு) என்னடா முறைக்கிறீர்கள்? அவிழ்த்து விடுகிறீர்களா, இல்லையா?

(கையிலுள்ள சவுக்கினால் ஓங்கிச் சொடுக்கி அவர்களை அறைகிறான். உடனே சிப்பாய்கள் 1-ம் 2-ம் கட்டுகளை அவிழ்த்துவிடுகிறார்கள். ஆட்டையும் கட்டில் காலில் கட்டுகிறார்கள்).

**சிப். 3** : என்னடா, தொடை நடுங்கிப் பயல்களா; என்ன விழிக்கிறீர்கள்? பிடியுங்கடா இந்த அயோக்கியப் பயலை!

(சிப்பாய்கள் 1-ம் 2-ம் வாளை உருவிக்கொண்டு சின்ன மருதுவை நெருங்குகிறார்கள். சின்ன மருது உஷாராகி விடுகிறான்).

**சின்ன** : டேய், சிப்பாய்களா! உங்களிடம் பிடிபடுவதற்கு என்னையும் அந்த அப்பாவி ஆடு என்று எண்ணிக்



**கிராம. 2** :

**சின்ன** :

**கிராம. 1** :

**கிராம. 2** :

**சின்ன** :

கொண்டீர்களா? டேய், சிப்பாய்! கிட்டே நெருங்காதே, நெருங்கினால் உங்கள் ஒருவர் தலைகூட மிஞ்சாது ஜாக்கிரதை!

(சிப்பாய்கள் சின்ன மருதுவைத் தாக்க முனைகிறார்கள். சின்ன மருது அவர்களை எதிர்த்து வாட்போர் புரிகிறான். கடைசியில் சிப்பாய்கள் மூவரும் சின்ன மருதுவைச் சமாளிக்க முடியாமல் திடீரென்று ஓட்டம் பிடிக்கிறார்கள்).

ஓடுங்கடா, பயந்தாங்கொள்ளிப் பயல்களா! திரும்பியா பார்க்கிறாய். ஓடுடா, ம்? (அவர்கள் ஓடியபின்பு மெல்லச் சிரித்து) வெறும் சோற்றுப் பட்டாளம். ஓடிவிட்டார்கள்! (வாளை உறையில் இடுகிறான்).

கிராம. 2 : (சின்ன மருதுவை வணங்கி) ஐயா! கடவுள் மாதிரி வந்து எங்களைக் காப்பாத்தினீங்களே. நீங்க யாரு?

சின்ன : பெரியவரே, நான் கடவுள் அல்ல. உங்களில் ஒருவன்தான்! இதோ பாருங்கள், என்னைத் தெரிகிறதா?

(முகத் திரையை விலக்குகிறான்).

கிராம. 1 : (வியந்து) அண்ணே! இது நம்ம சின்ன மருது சேர்வைல்லா!

கிராம. 2 : சின்ன மருதுங்களா? (கையெடுத்துக் கும்பிடுகிறான்).

சின்ன : ஆம். சின்னமருதுதான். துரதிருஷ்டத்தால் உங்களையெல்லாம் இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டு, தூரதொலையிலே வசித்துவரும் உங்கள் சேனைத் தலைவன் சின்ன மருதுதான்.

**கிராம. 2** : ஐயா, மருதையா! நீங்க இப்படி உசுருக்குப் பயப்படாம, துணிஞ்சி வந்துட்டீங்களே. இப்படி நீங்க வரலாமா? நீங்க வந்த விசயம் அந்தப் பயல்களுக்குத் தெரிஞ்சா -? வாங்க உள்ளே.

**சின்ன** : இல்லை, பெரியவரே, நான் சீக்கிரமே போக வேண்டும். நான் வந்த காரியம் இதுதான். நமது சிவகங்கைச் சீமையிலிருந்து இந்த நவாப்புச் சிப்பாய்களை விரட்டியடித்து, நாம் மீண்டும் நமது ஆட்சியை இங்கு நிறுவியாக வேண்டும். அதுபற்றி உங்களையெல்லாம் சந்தித்துப் பேசவே இங்கு வந்தேன்.

**கிராம. 1** : அப்படிங்களா? இப்போதே உத்தரவு கொடுங்கள். இப்போதே ஊரை ஒன்றுதிரட்டி, இந்தப் பயலுகளை ஒழிச்சிக்கட்டிப்பிடுவோம்!

**சின்ன** : தம்பி, இவர்களை ஒழித்துக்கட்டுவது அவ்வளவு லகுவான காரியம் அல்ல. அதற்கும் நாம் திட்டமிட்டே செயலாற்ற வேண்டும். சரி, நான் இங்கேயே நின்றுகொண்டிருப்பது ஆபத்து. அந்தப் பயல்கள் ஆட்களைத் திரட்டிக்கொண்டு திரும்பவும் வரக்கூடும். நான் வந்த விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்.

இன்றிரவு பத்து நாழிகைப் பொழுதுக்குமேல் நீங்கள் நமது நகரத்தின் முக்கியஸ்தர்களை யெல்லாம் அழைத்துக்கொண்டு, ஊருக்குக் கிழக்கேயுள்ள ஆவாரங்காட்டுக்கு வந்து சேருங்கள். இந்த ரகசியம் எந்த விதத்திலும் வெளியே தெரிந்துவிடக் கூடாது. தெரிந்தால் பேராபத்து.

**கிராம. 1** : ஆகட்டும் மருதண்ணே. எல்லாத்துக்கும் நானே சொல்லிக் கூட்டிட்டு வந்திடறேன்.

**சின்ன** : ஆமாம். காதோடு காது வைத்தாற்போல் காரியம் நடக்க வேண்டும். சரி, நான் வருகிறேன்; பிறகு சந்திப்போம். வரட்டுமா பெரியவரே!

**கிராம. 2** : பதனமாப் பாத்துப் போங்க, மருதையா!

(சின்ன மருது போகிறான்).

- திரை -

## காட்சி - 13

**இடம்** : (திண்டுக்கல்) கோட்டை உட்புறம்.

**பாத்திரங்கள்** : வேலு நாச்சியார், வெள்ளைமருது, சின்ன மருது.

(காட்சி ஆரம்பத்தில் வேலு நாச்சியாரும் வெள்ளை மருதுவும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்).

**வேலு** : பிரதானியாரே, தங்கள் தம்பி சின்ன மருதுவிடமிருந்து தகவலே இல்லையே. போன இடத்தில் ஏதாவது அபாயம், ஆபத்து -

**வெள்ளை** : மகாராணி! அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை. அபாயம் நிறைந்த இடத்தில் பழகுவதென்பது என் தம்பிக்கு ஒரு

Scanned by CamScanner